எம்.சி.ஓ.பி. எண்: 4971 மற்றும் 4972/2022 தேதி : 4.4.2024

எ.ம.சா. : 1

பெயர் : திரு. பழனி

த/பெ. : திரு. நடராஜன்

வயது : 48

<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இம்மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்த வாகனத்தில் நான் நடத்துனராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் நடத்துனர் இருக்கையில் அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு தலையில் அடிபட்டது. பேருந்தில் அமர்ந்திருந்த 15 நபர்களுக்கு அடிபட்டது, அவர்களை திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். எங்கள் பேருந்திற்கு எதிரே இரண்டு கார்கள் வந்தது. சிகப்பு கலர் காருக்கு சேதாரம் ஏற்பட்டது. எதிரே வந்த காரின் பதிவு எண் 6978 என்பதாகும். எங்கள் வாகனம் மெதுவாக சென்றது. எதிரே வந்த கார் வேகமாக வந்தது. விபத்து நடந்த இடத்தில் ஊர் பொது மக்கள் வந்தார்கள். இந்த விபத்து என்னுடைய வாகனத்தின் ஓட்டுநரின் அஜாக்கிரதையால் ஏறபட்டுள்ளது என்றாலும் காரின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த விபத்தில் ஏற்கனவே இறந்தவர்கள் மற்றும் காயம்பட்ட நபர்கள் தாக்கல் செய்த வழக்கு எண் 1407/2021, 1406/2021, 1414/2021 மற்றும் 1415/2021 என்ற வழக்குகளில் எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் பேருந்தின் பின்புறத்தில் அமர்ந்திருந்தால் விபத்து பற்றி எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து பேருந்தின் ஓட்டுநரால் தான் ஏற்பட்டுள்ளது என்பதால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.